# புறநானூற்றில் பெண் ஆளுமை

# Personality of women in Purananuru

**முனைவர் வெ.பரிமளம்,** உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

**Dr Parmalam V,** Assistant Professor, Department of Tamil Literature, Nallamuthu Goundar Mahalingam College, Pollachi

**DOI: 10.5281/zenodo.60749769**

**Abstract**

Personality a characteristics way of thinking, feeling and behaving. The women has multiple personality of taking care of family, children and growing them in a proper manner. Men was scheduled to busy work so all the family responsibilities was on the shoulders of the women. They brought up their children as great warriors and as proper citizens to face all the social issues. They want their children to be strong. Women on those days should not express their love but a poet expressed her love. It is great personality behind the women. The great poet oviyar sat with the great king Atiyaman and had toddy and expressed that in her song. It was not objected by any one. She was considered to be a great personality. It is found the women were great multiple personalities to face the challenges of the entire world and the society.

**ஆய்வுச்சுருக்கம்**

ஆளுமை என்பது ஒருவரின் ஒருங்கமைந்த பண்புகளையும் அவைகள் தோற்றுவிக்கும் நடத்தையையும் குறிக்கும். ஆளுமை என்பது Personality என்னும் ஆங்கிலச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இது தனி மனிதர்களின் ஒட்டு மொத்தப் பண்புத் தொகுதி எனலாம். பொதுவாக பல திறன் கொண்டவர்களைப் பன்முக ஆளுமைத்திறன் ஆளுமை கொண்டவர்கள் என்பர். அவ்வகையில் பெண்கள் குடும்பத்தைக் கவனித்தல், சமுதாய மேம்பாடு, குழந்தை வளர்ப்பு, பொருளீட்டுதல் போன்ற செயல்களை ஒருங்கே செய்யும் செயல் திறன் கொண்டவர்கள். பெண்களின் பலதரப்பட்ட ஆளுமைப்பண்புகளை புறநானூறு வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**Keywords :** பெண் ஆளுமை, புறநானூறு, சங்க இலக்கியம், பெண் நடத்தை, ஆளுமைப் பண்புகள்

ஆளுமை என்பது ஒருவரின் ஒருங்கமைந்த பண்புகளைக் குறிக்கும். இது தனிமனிதர்களின் ஒட்டு மொத்தப் பண்பு ஆகும். இந்தப் பண்பு தொகுதியே ஆளுமை எனப்படுகிறது. பெண்கள் பன்முக ஆளுமைத்தன்மை கொண்டவர்கள். பெண்கள் உயரிய ஆளுமையின் அடையாளமாகவும் நுட்பமான அறிவுடையவர்களாகவும் தனித்துவம் பெற்றவர்களாகவும் விளங்கினர்.

பெண்கள் தன்மானம் மிக்கவர்களாகவும் மக்களை நல்லமுறையில் வளர்த்து சமுதாயத்தில் உள்ள சிக்கல்களை எதிர்கொள்ளும் வகையில் வளர்க்கும் ஆளுமை கொண்டவர்கள். வீரம் மிக்கவர்களாக ஆண்களைப் போருக்கு அனுப்பும் மனவலிமை பெற்றவர்களாகவும் விளங்கினர். பெண்கள் முடிவெடுப்பதில் திறன் வாய்ந்தவர்கள், தெவைக்கேற்ப செயலாற்றக் கூடியவர்கள்,

ஆண்கள் வெளியே செல்ல அனைத்தையும் கவனிக்கும் பொறுப்பு பெண்களிடம் இருந்தது. போர், தொழில் தவிர அரசியல் உள்பட ஏனைய அனைத்துக் களங்களிலும் பெண்கள் ஆளுமை செலுத்தியதை புறநானூறு உணர்த்துகிறது.

**பெண்களின் ஆளுமை**

அக்கால சமுதாயத்தில் வாழ்வை வடிவமைக்கும் ஒழுக்கமுறைகளிலும் சமூக கட்டமைப்பிலும் மேலாண்மை கொண்டிருந்தவர்கள் பெண்களே என்பதை,

**செறிவும் நிறையுஞ் செம்மையுஞ் செய்யும்**
**அறிவும் அருமையும் பெண்பாலன்ன** **தொல் – பொரு -14**

என்கிறார் தொல்காப்பியர். அடக்கம், மனவலிமை, நடுவுநிலைமை, நன்மை, தீமைகளை அறிகின்ற ஆற்றல் ஆகியவை பெண்மையின் குணங்களாகும். சங்க இலக்கியத்தில் தலைவி, தோழி, செவிலித்தாய் போன்றோர் கூற்றுகள் பெண்கள் ஆளுமையுடன் விளங்கியதை எடுத்துரைக்கிறது. சங்ககாலப் பெண்கள் கல்வியில் மேம்பட்டிருந்தனர் என்பதற்கான சான்றாக ஔவையார், வெள்ளிவீதியார் உள்ளிட்ட பெண்பாற் புலவர்களின் பாடல்கள் அமைகின்றன. அரசர் அவையிலும் ஆண் புலவர்களுக்கு நிகராகப் பெண்பாற் புலவர்கள் அரசியல் அறிந்தவர்களாக விளங்கியுள்ளனர். பெண்கள் உயரிய ஆளுமையின் அடையாளமாகவும் நுட்பமான அறிவுடையவர்களாகவும் தனித்துவம் பெற்றவர்களாகவும் விளங்கியதை புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**தன்மானம்**

தன்மானம் என்பது ஆளுமைப்பண்புகளில் ஒன்றாகும். உளவியல் அடிப்படையில் மனிதனை அவனது நிலையில் இருந்து தாழ்த்துகின்றபொழுது எழுகின்ற அவளின் மனவுணர்வுகள் தான் தன்மானமாகும். தன்மானம் என்பது தம்மை இழிவுபடுத்துகின்ற போதே தமக்கான ஒன்றைப் பிறர் எடுத்துக்கொள்ள முயற்சி செய்தாலோ தம்மை குறைத்து மதிப்பிட்டாலோ வெளிப்படும். ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பரிசில் பெறுவதற்காக சென்றிருந்தார். மன்னன் பரிசில் வழங்க காலம் தாழ்த்தினான். அதைக் கண்ட ஔவை மரத்தைப் பற்றி பயன்கொள்ளும் தச்சர்கள் பெற்ற சிறுவர்கள் மழுவோடு காட்டிற்குச் சென்றால் மரங்கள் எப்படி அவர்களுக்குப் பயன்படுமோ அதுபோல் எந்த திசைக்குச் சென்றாலும் சோறு கிடைக்கும் என்று தன்மானத்தின் உச்சகட்டத்தை

**எத்திசைச் செல்லினும் அத்திசைச்சோறே** **புறம் பா.எ. 206(3)**

என்று வெளிப்படுத்துகிறார். வறுமையில் வாடினாலும் பரிசிலின் பொருட்டாக யாரையும் சென்று இரப்பதில்லை என்னும் மாண்பினை "சோற்றுக்காக நின்னை உற்றேன் இல்லை" என்ற கூற்று எடுத்துரைக்கிறது.

**தாயின் ஆளுமை**

பெண்தான் அனைத்து உயிர்களையும் உண்டாக்கி காப்பாற்றி உயிர்ப்பிக்கிறாள். ஆக்கலும் காத்தலுமான சக்தியாக பெண் விளங்குகிறாள். பிள்ளைகளைப் பெற்று நற்குடிமக்களாக வளர்த்து

ஆளாக்கும் மிகப்பெரிய சமூகப்பொறுப்பு பெண்களிடமே இருந்தது. ஆண்கள் போர், தொழில், அரசியல் ஆகியவற்றில் கவனம் செலுத்த, குடும்பம் என்பது பெண்ணின் ஆளுகைக்கு உட்பட்டதாயிற்று. நல் மக்களைப் பெற்று வளர்த்து அவனைச் சமுதாயத்தில் உள்ள சிக்கல்களை எதிர்கொள்ளும் வகையிலும் உடல்வலிமை, மனவலிமை படைத்தவர்களாகவும் சமுதாயத்திற்கு பயன்தரும் வகையில் அவர்களை வளர்ப்பதும் தாயின் கடமையாகும். இதை

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**.....................................................................................................**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்கு கடனே** - **புறம் -312**

என்கிறது. ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பங்கிட்டு கொடுக்கும் ஆளுமையுடையவளாகவும் கடமையைச் சரிவரச் செய்பவளாகவும் பெண் அமைந்திருந்ததை அறியமுடிகிறது.

**வீரம்**

பெண்கள் போர்க்களத்திற்கு சென்று போர் செய்யவில்லை என்றாலும் கூட தன் மகன்களை வீரம் மிகுந்தவர்களாக வளர்க்கும் ஆளுமை அவர்களுக்கு இருந்தது. தன் மகன் இறந்தாலும் கூட போர்க்களத்தில் புறமுதுகிடக்கூடாது என்று அக்காலப் பெண்கள் எண்ணினர். பெண் ஒருத்தி நாட்டுக்காகத் தந்தையைப் போர்க்களத்திற்கு அனுப்பினாள் . அவன் வீரச் சாவடைந்தான். பின்னர் கணவனைப் போருக்கு அனுப்பினாள். அவள் கணவனும் இறந்தான். ஆனால் கலங்காமல் போர்ப்பறை கேட்டுத் தன் ஒரே மகனையும் போர்க்களத்திற்கு அனுப்பினாள். இதை

**கெடுக சிந்தை கடிது இவள் துணிவே**
**..................................................................................................**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுக நோக்கிச் செல்க என விடுமே** - **புறம் -279**

என்று தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பிய பெண்ணின் துணிவை விளக்குகிறது. உன் மகன் எங்குள்ளான் என்று ஒரு வீரத்தாயிடம் கேட்க என் மகனுக்கும் எனக்கும் இருக்கும் தொடர்பு புலிக்கும் குகைக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. அது போல என் மகன் போர்க்களத்தில் இருப்பான் என்று பின்வருமாறு கூறுகின்றார்.

**சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்**
**யாண்டுளனோ என வினவுதி ஆயின் என் மகன்**
**யாண்டு உளனாயினும் அறியேன் ஒரும்**
**சேர்ந்து போகிய கல்அளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதோ போர்களத்தானே** - **புறம் -86**

தன் மகன் போரில் புறமுதுகிட்டான் என்று கேட்ட தாய் அது உண்மையாக இருந்தால் அவனுக்கு பாலூட்டிய மார்பினை அறுப்பேன் என்று சூளுரைத்த தன்மையும் உண்டு. இது அவர்களின் வளர்ப்பின் மேல் ஏற்பட்ட நம்பிக்கை எனலாம். போர்க்களத்திற்கு சென்ற தாய் தன் மகன் புறமுதுகிட்டு இறக்கவில்லை என்பதைக் கண்டதும் அவனைப் பெற்றதை விட அதிக மகிழ்ச்சியை அடைந்தாள். இதை

**படு மகன் கிடக்கை காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே** - புறம் – 278

என்ற அடிகள் உணர்த்துகிறது. சிறுவயதில் பாலை ஊட்டினால் குடிக்காத போது கோலை நீட்டினால் அச்சம் கொள்ளும் மகன் யானைகளைக் கொன்று மார்பில் புண்ணோடு, நிற்கும் அம்புடன் கேடயத்தின் மேல் வீழ்ந்து கிடக்கும் வீரத்தைக் கண்டு பெருமை கொள்கிறாள். தன் மகன் இறந்த சோகத்தை விட போரில் புறமுதுகிட்டு தன் வளர்ப்பைப் பொய்யாக்கக் கூடாது என்ற தவிப்பு பெண்களிடம் காணப்பட்டுள்ள தன்மையே அவர்களின் ஆளுமைக்குச் சான்றாகும். போருக்குச் சென்ற கணவன் வெற்றியுடன்தான் வருவான் என்ற நம்பிக்கையில் நடுகல்லை வழிபட்டுக் காத்திருக்கும் பெண்களின் வீரமும் அவர்களின் ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

**ஒருதலைக்காதல்**

கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். ஒருவரிடம் தான் கொண்ட காதலை அவர் விரும்பாத நிலையிலும் கூறுவதும் கைக்கிளை ஆகும். பெருநற்கிள்ளியை விரும்பும் நக்கணையார்தான் தம் காதலை முதலில் வெளிப்படுத்துகிறார். பெண்கள் முதலில் தங்கள் காதலை வெளிப்படுத்துவது என்பது பெரும்பாலும் இல்லை எனலாம். அதை சமூகமும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் அவ்வாறு வெளிப்படுத்துவதற்கு மிகப் பெரிய ஆளுமை தேவை. நக்கணையார் அப்படிப்பட்ட ஆளுமையுடையவராகத் திகழ்ந்த தன்மையை "என் தலைவன் நாடிழந்து வறுமையால் கூழ் உண்டான். ஆயினும் பகைவரும் அஞ்சும் பெருந்தோளையுடையவன் யாம் அவனுடைய சிறைப்புறத்து இருந்து அவனைக் கண்டிருந்த போதும் அவனை மெய்யுறத் தழுவாமையால் பொன் போலும் நிறத்தை அடைந்தனம்" புறம் -84 என்று தன் காதலை வெளிப்படுத்தும் தன்மையைக் காணமுடிகிறது.

**தூது**

தலைவன் பிரிவானது பல்வேறு காரணங்களால் நிகழும் அதில் தூதும் ஒன்றாகும். ஓதல் பகை தூது இவை பிரிவே என்கிறது தொல்காப்பியம். இவ்வகையில் ஆண்கள் மட்டுமே தூது செல்லும் உரிமையைப் பெற்றிருந்தனர். அதியமானுக்காக ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றார். அரசனின் தூதாக ஒரு பெண் அக்காலத்தே பணியாற்றினார் என்பது பெண்களின் புலமை, திறமை போன்றவற்றிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

**நட்பு**

ஆண், பெண் நட்பின் திறத்தை ஔவை அதியமான் நட்பு எடுத்துரைக்கிறது. அக்காலச் சூழலில் பெண்ணான ஔவை அரசனோடு கூடி இருந்து கள் அருந்தும் உரிமையைப் பெற்றிருந்தாள். "சிறிய கட் பெறினே " என்று பாடலாகவும் பதிவு செய்திருக்கிறாள். ஆனால் யாரும் அதை எதிர்க்கவும் இல்லை என்பதால் பெண்ணின் ஆளுமையைச் சமூகம் மதித்திருக்கிறது.

**கைம்மை**

தலைமக்கள் இருவருள் ஒருவர் இறந்தால் மற்றவர் தான் இன்னும் இறவாமல் உயிர் வாழ்கிறோம் என்று புலம்புவர். அதில் பெண்கள் கைம்மை நோன்பு மேற்கொள்ளுவர். பூதபாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு தன் கணவன் இறந்த பின் "கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிராக யாம் இருக்கமாட்டோம். சுடுகாட்டில் இருக்கும் விறகு அடுக்கப்பட்ட படுக்கை உனக்கு அரியதாக இருக்கலாம் . ஆனால் எங்களுக்குப் பெரிய தோளையுடைய எம் கணவன் இறந்த பிறகு மொட்டின்றி நிறைந்த இதழ்களையுடைய மலர்ந்த தாமரையை உடையதும் நீர் செறிந்ததுமான பெரிய பொய்கையும் ஒன்றாகும்." புறம் பா.எண் -246 என்கிறாள். கணவன் இறந்த பிறகு தானும் அவனுடன் இறக்க வேண்டும் என்று மனைவி விரும்புவதை

**முடலை விறகின் முளியெரி பொத்தி மிக்கவென்**
**கணவன் வினைப்பயன் உய்யப் புக்குழிப் புகுவேன்" - மணிமேகலை -16 (26-28)**

என்பதால் அறியலாம். தன் மனைவி இறந்த பின்பு வாழ விரும்பாத தன்மையை சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை

**கள்ளி போகிய பாரி மருங்கின்**
**வெள்ளிடைப் போகிய விளை விறகுஈமத்து**
**ஒள் அழற் பள்ளிப்பாயல் சேர்த்தி "**
**ஞாங்கள் மாய்ந்தனன் மடந்தை**
**இன்னும் வாழ்வல் என் இதன் பண்பே" புறம் பா. எண் -245(3-7)**

என்னும் அடிகளால் விளக்குகிறார். இறப்பிற்கு பின்னரும் பெண்கள் ஆளுமை செலுத்திய திறத்தையே இது விளக்குகிறது.

**திருமணம்**

பெண்கள் திருமணப் பருவம் எய்தியவுடன் அவர்களுக்கு திருமணம் செய்ய பெற்றோர் விழைவர். பெண்ணை பலர் மணக்கக் கேட்பதும் உண்டு. அதில் தகுதியில்லாதவர்களை நிராகரிப்பதும் உண்டு. பெண் மறுப்புக் காரணமாக போர்கள் நிகழ்வது உண்டு. தாயும் தன் மகளை மறக்குடியில் பிறந்த ஒருவனுக்கே மணம் முடிக்கக் கருதுவாள். பேரரசர்கள் ஒரு பெண்ணை விரும்பினாலும் அப்பெண்ணின் மனதில் அவ்வரசன் இல்லையென்றால் அப்பெண் அவனைத் திருமணம் செய்து கொள்ளமாட்டாள். பணத்தையோ பொருளையோ விரும்பித் திருமணம் செய்யும் வழக்கம் பெரும்பான்மையான பெண்களிடம் காணப்படவில்லை. புறம் - 339

பெண்கள் முடிவெடுப்பதில் திறன் வாய்ந்தவர்கள். தேவைக்கேற்ப செயலாற்றும் திறன் கொண்டவர்கள். வரகு, திணை முதலிய உணவுப் பொருட்கள் தீர்ந்து விட்டாலும் கதிர்களாக காய வைத்திருந்த விதைப்பயிர்களை உணவாக்கி வழங்கக் கூடியவர்கள். (புறம் – 333)

**முடிவுரை**

பெண்கள் இல்லத்தை நிர்வகிக்கக்கூடியவர்களாக ஆண்மக்களை நல்லவழியில் வளர்த்து அவர்களை நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் கடமையாற்றும் திறன்மிக்கவர்களாக மாற்றும் அதீத பொறுப்பு கொண்டவர்கள். ஆண்கள் போர் மற்றும் வெளிவேலைகள் காரணமாக வெளியே செல்ல அனைத்தையும் கவனிக்கும் பொறுப்பு பெண்களிடம் இருந்ததது. அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பைச் செம்மையாக செய்தனர். போர், தொழில் தவிர அரசியல் உள்பட ஏனைய அனைத்து களங்களிலும் பெண்கள் ஆளுமை செலுத்தியதை புறநானூறு உணர்த்துகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரையாசிரியர்), புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட், அம்பத்தூர், சென்னை, மூன்றாம் பதிப்பு – 2007
2. கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரையாசிரியர்) , தொல்காப்பியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட்ட, அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு பதிப்பு – 2019
3. மணிமேகலை, சாரதா பதிப்பகம், சென்னை

**References**

1. Balasubramaniyan (Urai.Aasi), Purananuru, NCBH, Chennai, 3rd Edition – 2007.
2. Balasubramaniyan (Urai.Aasi), Tholkappiyam, NCBH, Chennai, 1st Edition – 2019.
3. Manimegalai, Saradha Pathippagam, Chennai

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**பரிமளம். வெ " புறநானூற்றில் பெண் ஆளுமை"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 1, சனவரி 2022, பக். 01-06

**Cite this Article in English**

**Parmalam V. " "** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 1, January 2022, pp. 01-06